*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://tamilmanam.in/
Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# Life Cycle Rituals in Sangam Literature

**S. Mohan[1]*, Dr. Seeman Ilayaraja[2],**

[2]Ph.D. Research Scholar, Department of Folklore, Tamil University, Thanjavur – 10.
[1]Supervisor, Assistant Professor, Department of Folklore, Tamil University, Thanjavur – 10.
*Correspondence: sohankulumur85@gmail.com. Tel: 9843709056

**Article Info**
Received on 20-Feb-2026, Revised on 25-Feb-2026, Accepted on 25-Feb-2026, Published on 01-Mar-2026

## ABSTRACT

*Rituals originated from the continuous practice of our ancestors' worship-related activities since ancient times. Beyond rituals associated with deity worship, various ceremonies have been created to mark different stages of human growth, transitions—including fertility rituals—and death.*

*In the life shared by a man and a woman, marriage and its accompanying rituals hold a unique place. In the primitive state, the union of male and female was driven by sexual instinct; however, through the process of social evolution, this union evolved into the institutions of marriage, family, children, and lineage. Over time, specific rituals were developed to formalize these unions.*

*This article explains the various rituals performed by people, ranging from naming a newborn child and honoring ancestors to celebrating birth, as well as the rites performed during death and those intended for the soul's salvation.*

***KEYWORDS:*** *social evolution, rituals, sangam literature..*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

# சங்க இலக்கியங்களில் வாழ்க்கை வட்டச் சடங்குகள்

[1]**செ. மோகன், முனைவர் பட்ட ஆய்வாளர்,** நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10.

[2]**முனைவர் சீமான் இளையராஜா,** நெறியாளர், உதவிப் பேராசிரியர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10

**ஆய்வுச் சுருக்கம்**

நம் முன்னோர்களின் வழிபடுசார் செயல்களைத் தொடர்ந்து தொன்றுதொட்டு செய்து வருதலால் சடங்குகள் தோற்றம் பெற்றன. இறைவழிபாடு சார்ந்த சடங்குகள் மட்டுமின்றி, வளமைச் சடங்குகள் உள்ளிட்ட மனித வாழ்க்கையின் பல்வேறு வளர்ச்சி, மாற்றங்கள், இறப்புகள் சார்ந்தும் சடங்குகள் உருவாக்கம் பெற்றுள்ளன.

ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்க்கையில் மணம் என்பதற்கும் அதையொட்டிய சடங்குகளுக்கும் தனித்துவமான இடமுண்டு. காட்டுமிராண்டி நிலையில் இணைவிழைச்சுக் காரணம் பற்றி ஆண் பெண் இணைதல் என்பது சமூக வளர்ச்சிப் போக்கில் திருமணம், குடும்பம், குழந்தைகள், மரபினர் என்று அமைகிறது. அவ்விணைவில் காலப்போக்கில் சடங்குகள் உருவாக்கம் பெறுகின்றன.

பிறந்த குழந்தைக்குப் பெயரிடுவது முதல் முன்னோரைப் போற்றுதல், பிறப்பினைக் கொண்டாடுதல் போன்றவற்றைச் செய்தலும், அதே நேரத்தில் இறப்பின் போது செய்யப்படும் சடங்குகள் முதல் உய்வடைவதற்கான சடங்குகள் வரை மக்களால் மேற்கொள்ளப்படும் சடங்குகளைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆய்வு நோக்கம்**

அழிந்து வரும் மக்களின் பழமையான பண்பாடு மற்றும் அதனுள் அடங்கிய சடங்குகளை மீட்டுருவாக்கம் செய்தல், சமூக அடிப்படை பழக்கவழக்கங்கள் சார்ந்த பின்புலங்களை பதிவு செய்தல், இக்கால மக்களின் பழக்கவழக்கள், சடங்குகள், பண்பாடுகள் போன்றவற்றை சிதைவின்றி எதிர்கால தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல், ஆய்வுக்கு உட்பட்ட பகுதி மக்களிடம் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஆவணப்படுத்துதல் போன்றவை இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

மனிதனின் வாழ்க்கை வட்டச் சடங்குகள் அனைத்தும் மனித வாழ்வைப் பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு என பல தொடர் நிலைகளாகப் பகுத்து ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படுவதாக அமைகின்றன. மனித வாழ்வில் அடுத்தடுத்து நிகழும் ஒவ்வொரு நிலை மாற்றமும் ஏதேனும் ஒரு சடங்கு நிகழ்வோடு பண்பாட்டு வயப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

புனிதத் தன்மையோடு மேற்கொள்ளப்படும் முறையான, மனிதன் செய்வதற்கு ஏற்ற செயல்களை உள்ளடக்கியதே சடங்கு எனப்படும். சடங்குகள் அனைத்தும் புனிதத் தன்மையைப் பாதுகாக்கவும் அதற்குக் களங்கம் ஏற்படாமல் இருக்கவும் செய்யப்படுவதாகும். தீயவற்றில் இருந்து தனிமைப்படுத்தித் தூய்மையாக வைக்கவும் சடங்குகள் செய்யப்படுகின்றன. சடங்குகள் சமுதாயத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் அஃது பெரும்பாலும் நன்மை பயப்பதால் அமைகின்றன. சமய நிகழ்வின் பொழுது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சடங்கும் அதில் பங்கு பெறுவோர் அனைவரையும் ஒன்றுபடச் செய்கின்றது. ஒற்றுமையுடன் தங்களது சடங்கு முறையினை முறையாகச் செய்து வருகின்றனர். என்னதான் தங்களுக்குள் வேற்றுமைகள் இருந்தாலும் அதனை மறந்து ஒன்றுகூடி செய்கின்றனர். கிராம தெய்வ வழிபாட்டின் பொழுது இதனை நாம் காணலாம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ள அனைவரின் ஒன்றுபட்ட மனத்தின் வெளிப்பாடே அச்சமூகத்தின் சமயம் ஆகும். தொன்மைச் சமயம் முதல் இன்றைய பெரும் சமயங்கள், கிளைச் சமயங்கள் வரை அனைத்திலும் இடம்பெறும் சடங்குகள் மக்களை இணக்கமுறச் செய்தல் கருத்து வேறுபாடுகளை மறையச் செய்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளன. கிராமங்களில் ஏற்பாடு செய்யப்படும் விழாக்கள் தெய்வ வழிபாட்டினை மட்டும் உள்ளடக்கியதல்ல, மனிதனின் ஒற்றுமையினை வெளிப்படுத்துவதாகும். ஓன்றுகூடி வழிபடும் முறையை எடுத்துக்காட்டுவதாகும்.

பண்பாடு என்பது சடங்குகளால் பாதுகாக்கப்பட்டு வருகின்ற ஒன்றாகும். நன்மை பயப்பதற்காகவே அமைக்கப்பட்டது. பண்பாடு என்பதே மனிதனின் வாழ்வியல் நெறியில் இருந்து வந்த ஒன்றாகும். மனிதன் நம் வாழ்வோடு தோற்றுவித்த அனைத்தும் பண்பாட்டைச் சார்ந்ததாகும். சமயம் அல்லது மரபு வழியாக வந்த செயல்முறைகளின் தொகுப்பு சடங்குகளாகும். மக்களின் பயன்பாடு கருதிச் செய்யப்பட்டவையாகச் சடங்கு முறைகள் அமைகின்றன.

மனிதனது பிறப்பு, வளர்ப்பு, திருமணம் போன்ற அனைத்து நிலைகளிலும் சடங்குகள் இன்றியமையாத இடத்தைப் பெறும். மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை மனித வாழ்க்கையில் நம்பிக்கைகள் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளன. நம்பிக்கைகள் மக்களால்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. நம்பிக்கைகள் அச்சமூகத்தின் பண்பாட்டுச் சிறப்பையும், மரபுகளையும் வெளிப்படுத்தும் காரணிகளாக விளங்குகின்றன.

**வழிபாட்டுச் சடங்குகள்**

பழந்தமிழர்களிடம் தெய்வம் பற்றிய நம்பிக்கைகள் நிறைய காணப்பட்டது. அதன் விளைவாக பல வழிபாட்டுச் சடங்குகள் தோன்றின. தெய்வங்களை வெறுமனே வழிபடாது அத்தெய்வங்களை வளர்ச்சியின் தொடக்க காலத்தில் மனிதர்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தே இருந்துள்ளது. பின்னர் பண்பாட்டு வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளின் மனிதர்கள் தங்களை இயற்கையிலிருந்து தனித்துப் பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். இயற்கையின் அங்கமாகவே இருந்துவந்த மனிதர்கள் தங்களின் அங்கமாக இயற்கையைப் பாவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் பண்பாட்டு வளர்ச்சி என்பது அனைவருக்கும் ஒருமித்தமாக இல்லாத காரணத்தால் இன்றும் தொல் குடிமக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் கடைபிடித்து வருவதை அறியமுடிகிறது.

பூமியின் உயிர்த்தொகுதியாக மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் விளங்கிய போதிலும் இயற்கையின் பெரும் சக்திகளாக நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை கருதப்படுகின்றன. இயற்கையின் இச்சக்திகள் குறித்த தங்களின் அறிவையும், அனுபவங்களையும் எதிர்வரும் சந்ததியினருக்கு எவ்வாறு கொண்டு செல்வது என மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக சடங்குகளும், வழிபாடுகளும், நம்பிக்கைகளும் தோன்றியிருக்கின்றன.

சங்க இலக்கியங்களில் இயற்கை வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மக்கள் தங்கள் சுற்றுச்சூழலையும் தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்பட்ட நெருப்பு, காற்று, மழை, ஞாயிறு, விலங்குகள், தாவரங்கள், ஆறுகள், மலைகள் போன்றவற்றை அவைகளின் மீதான பயம் கருதியும், பயன் கருதியும் வழிபடச் செய்தனர். வழிபடுவதன் மூலம் தனக்கும் அச்சக்திகளுக்குமிடையே நல்லிணக்கத்தை உருவாக்கிவிட முடியும் என்ற நம்பிக்கை அடிப்படையான காரணமாக இருந்திருக்கலாம்.

உலகம் விளங்குவதற்குக் காரணமான பகலைத் தந்து உதவிய ஞாயிறு என்னும் பொருளில் இடம்பெற்றுள்ளதை,

"விளங்குபகல் உதவிய பங்கதிர் ஞாயிறு

வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

அருவி யான்ற பெருவரை மருங்கில்

சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயங் காணாது” (அகம் 91:1-4)

எனும் அகநானூற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

கடவுளுக்குச் செய்ய வேண்டிய சடங்கு முறைகளை செய்து அரசர்கள் பூமியை ஆண்டு வந்ததையும், அரசர்கள் தாங்கள் வெற்றி பெறுவதற்காகக் கடவுளுக்குச் சோற்றினைத் தூவி வழிபாடு செய்யும் வழக்கம் இருந்துள்ளதை,

“. . . . . . . . . . . . . . . . உரிதினின்

காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்

போகு பலிவெண் சோறு போலத்

தூவவும் வல்லன்” (புறம் 331:10-13)

எனும் புறநானூற்றுப் பாடல் எடுத்தியம்புகிறது.

இச்சடங்கு இன்றும் இருந்துவருகிறது. திருவிழாக் காலங்களில், சிறப்பு நாட்களில் அன்னதானம் வழங்குவது என்பது பெரும்பாலான கிராமங்களில் நடைபெற்றாலும், சிவன் கோயில்களில் அன்னாபிசேகம் எனும் சடங்கு நடைபெற்று வருகிறது.

**பிறப்புச் சடங்குகள்**

மனித வாழ்வானது பிறப்பு முதல் இறப்பு வரை பல நிலைகளில் பல்வகை சடங்குகளை நம் முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். பிறப்பு என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானதாகக் கருதப்படுகிறது. எனினும் பிற உயிர்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது ஒழுக்கமும், உயர்ந்த குணமுமே ஆகும். அத்தகைய உயர்ந்த பண்புடைய மக்களைப் பெறுவதற்கு மனிதன் செய்யும் தவங்களும், வழிபாடுகளும் எண்ணிலடங்காது.

கணவன் மனைவி பிணைப்பு மட்டுமின்றி நாம் பெறுகின்ற செல்வங்களிலேயே சிறந்த செல்வம் குழந்தைச் செல்வமாகும். இவ்வுலக வாழ்வும், மறுவுலக வாழ்வும் வளமுடைய குழந்தைப்பேறு அவசியம் என்று எண்ணினர். குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு மறுவுலக வாழ்வும் இல்லையென்று நம்பினர். பரத்தை இல்லத்திற்குச் சென்ற தலைவன், வழியில் தன்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

புதல்வனைக் கண்டு மயங்கி மீண்டும் பரத்தையிடம் செல்வதைத் தவிர்த்தான் என்பதை சங்கப்பாக்கள் விளக்குவதன் வாயிலாக குழந்தைப் பேறின் முக்கியத்துவத்தை நாம் அறியலாகிறது. குழந்தைச் செல்வத்தின் சிறப்பைப் பற்றி,

“இம்மை உலகத்து இசையொடு விளங்கி
மறுமை உலகமும் மறுவின்றி உய்ய
செறுநரும் விழையும் செயிர் தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்” (அகம் 66:1-4)

பகைவரும் விரும்பும் இனிய மக்கட் செல்வமுடையோர்க்கு இப்பிறவியல் மட்டுமல்லாது இனிவரும் பிறவிகளிலும் இசையும், இன்பமும் குறைவின்றிக் கிட்டும். இதனையே வள்ளுவரும்,

“குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்” (குறள் 66)

என்று குறிப்பிடுகிறார்.

குழந்தைப்பேறு இல்லாத பெண்கள் இன்றளவும் சமுதாயத்தின் தூற்றுதலுக்கு ஆளாக நேரிடுமே என அஞ்சுகின்றனர். அவ்வாறு தாய்மை அடையாத பட்சத்தில் இறைவனிடம் வேண்டுவதுண்டு. எதிர்பார்த்த காலத்தில் குழந்தைப்பேறு பெறவேண்டும் என பெண்கள் இறைவனை வேண்டுதலின் வாயிலாக அப்பேற்றினைப் பெற முயல்கின்றனர் என்பதை,

“கருவயிறு உறுக் எனட் கடம்படுவோரும்
செய் பொருள் வாய்க்க எனச் செவி சார்ந்துவோரும்
ஐஅமர் ஆடுக என அருச்சிப்போரும்” (பரி.8: 106-108)

என்கிறது பரிபாடல்.

**குழந்தைப் பிறப்பு**

மானுடவியல் புலத்தில் நிலைமாற்றம் என்ற கருத்தாக்கம் பிறப்பு என்ற தளத்திலிருந்து தனது இயங்கியல் தன்மையைத் தொடங்குகிறது. இயல்பு நிலையிலிருந்த மகளிரைக் கருவுயிர்த்தல் என்ற நிகழ்வானது மீவியல்பு நிலையை அடையச் செய்கிறது. இந்நிலையில் கரு ஓர் உருப்பெற்று தன் இருப்பைவிட்டு வெளிவரும் தன்மையை,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

“. . . . . . . . . . . பெண்ணிற் றுற்றெனப்

பட்டமாரி ஞான்ற ஞாயிற்றுக்

கட்டி னிணக்கு மிழிசின் கையது

போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ (புறம் 82:1-4)

என்கிறது புறநானூறு. இப்பாடல் வரிகள் மனைவி பிள்ளைப் பேற்றின் போது தனித்திருக்க தோள்வாரினால் கட்டில் செய்வதும், குழந்தைப் பிறப்பிற்கான சூழலை எடுத்துரைக்கிறது.

**குடுமி களையும் சடங்கு**

பிறந்த குழந்தைக்குக் காப்பின் பொருட்டு நிகழ்த்தப்பெறும் சடங்குகளுள் முடியிறக்குதலும், காதுகுத்தலும் சடங்கியல் நிகழ்வுகளாகும். இம்முறை குழந்தை பிறந்த ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் கழிந்த பின்னர் நிகழ்த்தப்பெறும் சடங்காகும். இச்சடங்குகளுள் முடியிறக்குதல் பற்றி,

“குடுமிகளைந்த நுதல் வேம்பி னொண்டனிர்

நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து” (புறம் 77:2-3)

என்கிறது புறநானூறு.

காதுகுத்தும் சடங்கு என்பது பெரும்பாலும் முடி இறக்கும் சடங்குடன் இணைந்து நிகழும் சடங்காகும். காதுகுத்தும் சடங்கு நிகழ்ந்தமைக்கான சான்றுகள் சங்க இலக்கியத்தில் இல்லை. எனினும் காதில் அணிகள் அணிந்தமை பற்றி,

“காதொன்ற களைதல்” (தொல் 1208)

என தொல்காப்பியமும்,

“நகைதாழ்பு துயில்வருஉம் வகையமை பொலிங்குழை” (திருமுரு 86)

என திருமுருகாற்றுப்படையும் எடுத்துரைக்கின்றன.

**திருமணச் சடங்குகள்**

மனிதகுல வரலாற்றில் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்க்கையில், மணம் என்பதற்கும் அதையொட்டிய சடங்குகளுக்கும் தனித்துவமான இடமுண்டு. ஆண் பெண் இணைதல் என்பது சமூக வளர்ச்சிப் போக்கில் திருமணம், குடும்பம், குழந்தைகள் மரபினர் என்று அமைகிறது. அவ்விணைவில் காலப்போக்கில் சில சடங்குகள் உருவாக்கம் பெறுகின்றன.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
**www.tamilmanam.in**
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

அச்சடங்குகளும் வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடுகின்றன.

சங்க காலத்தில் தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் ஈடுபட்டு திருமணம் புரிந்து கொள்வதும், பெற்றோர்கள் இசைவு பெற்றுத் திருமணம் செய்து கொள்வதும் வழக்கத்தில் இருந்துள்ளது. பெண்ணின் பெற்றோர் தன் மகளைத் தலைவனுக்குக் கொடுக்க அதை ஏற்றுக்கொள்வதே கற்பு வாழ்வின் தொடக்கமாக இருந்துள்ளது. அக்காலத்தில் திருமண சடங்கு முறைகளை அழகாக வர்ணிக்கின்றனர் சங்கப்புலவர்கள்.

> "உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
>
> பெருஞ்சோற்று அமலை நிற்ப, நிரைகால்
>
> . . . . . . . . . . . . . . . . . . . .
>
> . . . . . . . . . . . . . . . . . . . .
>
> வால்இழை மகளிர் நால்வர் கூடி
>
> பேர் இற்கிழத்தி ஆக . . . . ." (அகம் 86:1-19)

எனும் அகநானூற்றுப்பாடலில் தீய கோள்கள் நீங்கப்பெற்ற, வளைந்த வெண்மையான திங்களைத் தீமையற்ற சிறந்த புகழையுடைய உரோகிணி வந்து கூடும் நல்ல நாள் மணநாளாகும். மணம் செய்து வைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கள மகளிர், தலையில் நிறை நீர்க் குடத்தினை சுமந்தவராய்க் கைகளில் புதிய அகன்ற மண்டை என்னும் கலத்தினை ஏந்தியவராய் ஒருங்கு கூடினர். உளுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த குழைவாக வெந்த பொங்கலோடு பெருஞ்சோற்றுத் திரளை உண்பது இடைவிடாது நிகழ்ந்து கொண்டே இருந்தது. பந்தலிட்டு அதில் புதுமணல் பரப்பினர். நல்ல விளக்கு ஏற்றனர். மாலைகளைத் தொங்கவிட்டு வீட்டை அழகுறுத்தினர். தூய அணிகலன்களை அணிந்த மகளைப் பெற்றெடுத்த மகளிர் நால்வர் கூடிநின்று,'கற்பினின்றும் வழுவாது நல்ல பலவற்றினும் உதவியாக இருந்து, நின்னை மனைவியாகப் பெற்ற நின் கணவனைப் பேணிக்காக்கும் பெருவிருப்பத்தை உடைய ஆகுக' எனக் கூறி வாழ்த்தினர். வாழ்த்தியதுடன் நீரோடு குளிர்ந்த இதழ்களையுடைய மலர்களை நெல்லுடன் கலந்து அவளது பலவாகிய கரிய கூந்தலையுடைய தலையிலே தூவினர். வதுவை மணமும் நடந்து முடிந்தது. சடங்குகளைச் செய்த பின்னர் பெற்றோர் மணமகளைத் தலைவனிடம் ஒப்படைத்ததாகச் செய்தி புலப்படுகிறது.

**இறப்புச் சடங்குகள்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

மனித வாழ்வில் நிலையானது என்று எதுவுமில்லை. பிறப்பு என்று ஒன்று இருக்கும் அதே வேளையில் இறப்பு என்ற ஒன்றும் இருக்கும் என்பது எல்லோரும் அறிந்ததே. பிறப்பு, பூப்பு, திருமணச் சடங்குகள் போன்று இறப்புச் சடங்குகள் காலங்காலமாக நடைபெற்று வருகின்றன.

இறந்தவர் எவ்வயதினராக இருந்தாலும் ஒப்பாரி வைத்து மார்பில் அடித்துக்கொண்டு அழுவது வழக்கமான ஒன்றாகும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒப்பாரி பாடும் சில பெண்கள் இருக்கின்றனர். பாலினத்தைப் பொறுத்து அதற்கேற்ப ஒப்பாரி வைப்பதும், அழுவதும் உண்டு. இளம் வயதினராக இருந்தால் இறந்தவரின் நெருங்கிய உறவினர் கைவளையல்கள் உடையும் அளவிற்கு அழுவது அனைவரையும் கலங்க வைக்கும். இப்பழக்கம் புறநானூற்றுக் காலத்திலேயே இருந்துள்ளது என்பதை,

“முலைபொலி யாகம் உருப்பது லூறி
மெய் மறந்து பட்ட வரையாயப் பூசல்
ஒண்ணுதல் மகளிர்” (புறம் 25:10-12)

என்கிறது புறநானூறு. இளவெனிமான் என்னும் வள்ளல் இறந்தபோது அவன் மகளிர் மாரடித்துப் புலம்பியதையே இப்பாடல் எடுத்துரைக்கிறது.

பழங்காலத்திலும் இறந்தவர்களின் உடல்களை எரிக்கும் வழக்கம் இருந்துள்ளது. குறவனால் துண்டுகளாக்கப்பட்ட மரங்கள் போன்று கரிய புறத்தைக் கொண்ட விறகுகள் அதியமான் உடல்மீது அடுக்கப்பட்டிருந்தன. அதனைக் கண்ட அங்கிருந்த சான்றோர் ‘இதுகாறும் புகழ் மேம்பட்டு விளங்கிய அதியமான் மறைந்தான்’ என வருந்தினர். அவரோடு உடனிருந்த ஔவையார், அதியமான் உடம்பு எரியிற்பட்டு வெந்து கரியினும், வேகாது நேரே விண்ணுலகு புகினும், அவன் பெற்ற புகழ் ஒருகாலும் அழியா’ என கையற்று,

“எரிபுனக் குறவன் குறைய லன்ன
கரிபுற விறகி னீம வொள்ளழற்
குறுகினுங் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினு நீள்க”(புறம் 231:1-4) என பாடினார்.

**முடிவுரை**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

தொன்மை வாய்ந்த சங்க இலக்கியங்களில் பழந்தமிழர்களின் பண்பாட்டுக் கருவ+லங்களாகிய சடங்குகளும், நம்பிக்கைகளும் விரவிக்கிடக்கின்றன. இத்தகு பதிவுகள் தமிழர்களின் வாழ்வியல் முறைகளை எடுத்தியம்புகின்றன. அரசியல், சமயம், தத்துவம், குடும்பம், கொடை, போர் முதலான மானுடவியல் குறித்த தளங்களை மேலும் ஆய்வு செய்வதற்கு உதவும் என்பதில் மாற்றமில்லை. பழந்தமிழர் முதிர்ந்த நாகரிகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த பாங்கினை ஒவ்வொரு நிகழ்விலும் காணமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

1. ஔவை துரைசாமிப்பிள்ளை. சு., (உ.ஆ.,), புறநானூறு - மூலமும், உரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ஆழ்வார்பேட்டை, சென்னை – 18. 2007.
2. முனைவர் நாகராசன். வி., (உ.ஆ.,), பத்துப்பாட்டு - மூலமும், உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 98. 2004.
3. நாவலர் வேங்கடசாமி நாட்டார். ந.மு., வேங்கடாசலம் பிள்ளை. ரா., அகநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ஆழ்வார்பேட்டை, சென்னை – 18. 2009.
4. திருஞானசம்பந்தம். ச., தொல்காப்பியம் பொருளதிகாரம் - மூலமும், உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு – 04. 2020.

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*

Tamilmanam